


# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | டிசம்பர் 07, 2017 | புரட்சி 16 | முழக்கம் 47 | விலை: ரூ.3.00


## தமிழக தேர்வாணைய அறிவிப்பை திரும்பப் பெறக்கோரி

# கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

தமிழ்நாட்டில் மண்ணின் மைந்தர்களுக்கே வேலை தரவேண்டும்; தமிழ் படித்தவர்களுக்கே தமிழ்நாட்டில் வேலை தரவேண்டும்; தேர்வாணைய அறிவிப்பைத் திரும்பப் பெறவேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

தமிழக அரசு தேர்வாணையத்தை கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்டம் சார்பாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் 02.12.2017 மாலை 4 மணிக்கு வள்ளுவர் கோட்டம் அருகே நடைபெற்றது.




தமிழக அரசு கடந்த ஆண்டு 2016 நவம்பர் மாதம் அறிவித்த தேர்வாணைய அறிக்கையை திரும்ப பெறக் கோரி கண்டன முழக்கமிட்டனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக தலைவர் கொளத்தூர் மணி, இளந்தமிழகம் செந்தில், தந்தை பெரியார் திராவிடர் கழகம் கரு.அண்ணாமலை, மே 17 இயக்கம் பிரவீன்குமார், மனிதி இயக்கத்தை சார்ந்த செல்வி, எஸ்.டி.பி.அய். தெஹலான் (பாகவி, அம்பேத்கர் மனித நீதி இயக்கம்), பாண்டியராஜன், தமிழ்நாடு முற்போக்கு வழக்கறிஞர் ரஜினிகாந்த் உள்ளிட்ட தோழர்கள் தமிழக அரசு தமிழக இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறிக்கும் அறிவிப்பினை திரும்ப பெறக்கோரி கண்டன உரையாற்றினார்கள்.

கழகப் பொதுச் செயலாளர்கள் தமிழக இளைஞர்களின் வாழ்வாதாரத்தை வடநாட்டவருக்கு தாரை வார்க்கும் முயற்சியை கைவிடக் கோரி தனது கண்டன முழக்கத்தை எழுப்பி உரையை நிறைவு செய்தார். இறுதியாக வேழவேந்தன் (சென்னை மாவட்டத் தலைவர்) நன்றி கூறி ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார்

**காஞ்சியில் –** காஞ்சிபுரம் மாவட்டம் சார்ப்பாக ஆர்ப்பாட்டம் காஞ்சிபுரம் ஐயன்பேட்டை பகுதியில் நடைபெற்றது. கா.ரவி பாரதி (கழக மாவட்ட பொறுப்பாளர்) தலைமை தாங்கினார், மு.ஏழுமலை வரவேற்புரையாற்றினார்.

கண்டன உரையாற்றிய தோழர்கள் : காஞ்சி அமுதன் (அமைப்பாளர் தமிழக இளைஞர் எழுச்சி இயக்கம்), பாசறை செல்வராஜ் (நாடாளுமன்ற தொகுதி செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), கொண்டல் (மே 17 இயக்கம்), கோறா ரவி (ஒருங்கிணைப்பாளர் தமிழ் மக்கள் பண்பாட்டுக் கழகம்), ச.மகேஷ் (மாவட்ட



இளைஞர் அணி செயலாளர், மதிமுக), வெற்றி தமிழன் (தமிழ்தேச மக்கள் கட்சி), சு.இலங்கவி (மாநில பொதுச்செயலாளர், மாயாவதி தொழிற்சங்கம்), ந.ராமஜெயம் (திவிக), பா.சுரேசு (உழைக்கும் மக்கள் இயக்கம்), டில்லி (பாலாறு பாதுகாப்பு விவசாயிகள் சங்கம்), நன்றியுரை பிரகாசு (திவிக).

**திண்டுக்கல் –** திண்டுக்கல் மாவட்டம் சார்பாக 1.12.2017 அன்று காலை 10 மணிக்கு கொளத்தூர் ரோடு ரவுண்டானா முன்புற பகுதியில் தமிழர் இளைஞர்களின் வேலை வாய்ப்புகளை வடநாட்டாருக்கு வாரி வழங்கும் தமிழக அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்ட நடந்தது.




கழக மாவட்ட அமைப்பாளர் சு. மருதமூர்த்தி, திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் செல்வராஜ், ஒட்டன்சத்திரம் ஒன்றியம் அமைப்பாளர் தங்கவேல், பழனி நகரத் தலைவர் எம். கார்த்தி, பழனி நகரச் செயலாளர் முத்துக்குமார், பழனி ஒன்றிய துணைத் தலைவர் எம். துரையன், கடத்தூர் ஐயப்பன், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செய்தி தொடர்பாளர் சு.பொதினி வளவன், மாவட்ட துணைச் செயலாளர் பாவேந்தன், நகரச் செயலாளர் மணவாளன், பேச்சாளர்கள் ஆதி, அன்பு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


(கடும் மழை காரணமாக ஏனைய ஊர்களில் ஆர்ப்பாட்ட தேதி மாற்றப்பட்டுள்ளது)

# “மதம் சாராதவனாய் வாழ விரும்பினேன்! மதம் சாராதவனாய் மடியவும் விரும்புகிறேன்!”

மக்கள் கவிஞர் இன்குலாப் 2016ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் தேதி முடிவெய்தினார். 2009ஆம் ஆண்டிலேயே தனது மரணம் குறித்து அவர் கைப்பட எழுதிய கடிதம் இது.

என் தன் நினைவோடு எழுதும் கடிதம் எப்பொழுதும் இறப்பு நேரலாம் என்ற சூழலில் என் இறுதி விருப்பங்களைப் பதிவு செய்கிறேன். என் அன்புக்குரிய குடும்ப உறுப்பினர்களுக்கு மட்டுமின்றி, தோழமைக்குரிய நண்பர்களுக்கும் விடுக்கும் வேண்டுகோள் இது.

என்னை முழுமையாக என் மக்களுக்கு உரித்தாக்க விரும்பினேன். ஆனால் நேர்ந்த வாழ்க்கை அதற்கான முழு வாய்ப்பையும் தரவில்லை. இறப்பு என்பது வாழ்வின் தவிர்க்க முடியாத கூறு. இறப்புக்குப் பிறகு மறுபிறப்பில் எனக்கு நம்பிக்கை இல்லை. வாழ்ந்த மட்டும் சமயச் சார்பற்றவனாகவே வாழ்ந்தேன். அதனால் எல்லார்க்குமானவனாக என்னை உணர முடிந்தது.



உடலால் வாழ்ந்த இவ் வாழ்க்கை இறப்போடு முடி கிறது. மக்களுக்கு முழுமையாக உரித் தாக்கும் வண்ணமே என் சிந்தனை யும் செயலும் அமைய வேண்டு மென விரும்பிய போதிலும், அதை முழுமையாக்க முடியாத குறை என் மனத்தில் உண்டு.

இறப்பு உடலின் செயல்களை நிறுத்துகிறது. எனினும் என் உடல், இறப்புக்குப் பிறகும் பயன்படவேண்டும் என்று விரும்புகிறேன்.

அதனால் என் உடலை மருத்துவக் கல்லூரிக்கு வழங்க என் குடும்ப உறுப்பினர்களும், தோழர்களும் ஆவன செய்ய வேண்டுகிறேன். அப்படி வழங்குவது என்னை, என் வாழ்க்கையை என் விருப்பப்படி அர்த்தப்படுத்தும் என்று நம்புகிறேன்.

இசுலாமியக் குடும்பத்தில் பிறந்த நான்இவ்வாறு விருப்பம் எழுதி வைப்பது சரியா என்று என் உறவினர்களும்,இசுலாமிய நண்பர்களும் கருதலாம்.

**“மதம் சாராதவனாய் வாழ விரும்பினேன். மதம் சாராதவனாய் மடியவும் விரும்புகிறேன்.”**

உறுப்புக் கொடையும், உடற்கொடையும் மானுடத்துக்குச் செய்யும் உதவி என்று கருதுகிறேன். எத்தனை முஸ்லிம் மாணவ மாணவியர் மருத்துவம் பயில்கின்றனர். உடற்கூறு சோதனையின்றியும், பயிலாமலும் மருத்துவக் கல்வி நிறைவு பெறுமா? எனவே சமயஞ் சார்ந்தவர்கள்கூட இக் கொடைகளைத் தயங்காமல் வழங்க வேண்டும் என்பது வேண்டுகோள்.

**வாழ்வது, இனிமையானது - போராட்டங் களோடும் புன்னகையோடும்; இறப்பது நிறைவானது - நம்பிக்கையோடு.**

அன்புடன்

இன்குலாப் (செகாசீ. சாகுல் அமீது)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 07.11.2017

நினைவேந்தல் செய்தி உள்ளே...

# மதவெறிக்குப் பலியான ஜோயல் பிரகாஷ் மரணத்துக்கு நீதி கேட்டு வேலூரில் ஆர்ப்பாட்டம்



கடந்த அக்டோபரில் இந்து மதவெறி பேராசிரியரின் ஜாதி, மத வெறுப்பு துன்புறுத்தலால் மன உளைச்சலுக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொண்ட சென்னை கவின் கலைக் கல்லூரி மாணவர் ஜோயல் பிரகாஷ் மரணத்திற்கு நீதி கேட்டு சென்னை பத்திரிக்கையாளர் சங்கத்தில் செய்தியாளர்கள் சந்திப்பு 21.11.2017 காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந்த சந்திப்பில் ஜோயல் பிரகாஷ் தாய் மற்றும் தந்தை தன் மகனின் மரணத்திற்கு நீதிக் கேட்டு கண்ணீர் மல்க செய்தியாளர் சந்திப்பில் பேசினார்கள்.

பிரகாஷ் தற்கொலைக்குக் காரணமான கவின் கலைக் கல்லூரி துறைத் தலைவர் இரவிக்குமார் மீது கொலை முயற்சி வழக்கு தொடர வேண்டும் என்றும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வி.சி.க. தலைவர் திருமாவளவன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன், இயக்குநர் ரஞ்சித், நடிகர் சத்தியராஜ் ஆகியோர் செய்தியாளர்களிடம் வலியுறுத்தினர்.

நிகழ்வில் ஜோயல் பிரகாஷ் பெற்றோர் தங்கள் மகனுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கேட்டு பேசியது பார்வையாளர் உள்ளத்தைக் குலுக்கியது. ஜோயல் பிரகாஷின் அற்புதமான ஓவிய படைப்புகளை கல்லூரி மாணவர்கள் கரங்களில் ஏந்தி ஜோயல் பிரகாஷ் உருவத்தை தங்களது முகத்தில் அணிந்து நின்றனர். ஓவியப் படைப்புகளைப் பார்த்த அனைவரும் இவ்வளவு அற்புதமான கலைஞரை மதவெறியர்கள் பழி தீர்த்திருக்கிறார்களே என்று உள்ளம் குமுறினார்கள். திரைப்பட இயக்குநர் ராஜூ முருகன், இயக்குநர் கவுதமன், மே 17 இயக்கத்தைச் சார்ந்த திருமுருகன், காந்தி, சேவ் தமிழ் இயக்கத்தைச் சார்ந்த செந்தில் மற்றும் தோழர்கள், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பங்கேற்றனர். மாலை 6 மணி வரை பிரகாஷின் ஓவியப் படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. ஜோயல் பிரகாஷ் தற்கொலைக்கு முன் 'வாட்ஸ்-அப்' வழியாக பேசியது ஒளிபரப்பப்பட்டது. நவம்பர் 29 அன்று பிரகாஷ் சாவுக்கு காரணமான மதவெறி பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி வேலூரில் தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடந்தது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தொல். திருமாவளவன், வேல் முருகன் உள்ளிட்ட அனைத்து இயக்க கட்சிகளின் தலைவர்கள், தோழர்கள் பங்கேற்றனர்.

## கருத்தரங்கம் – நாடகம் – கவியரங்குடன் நடந்த

# கவிஞர் இன்குலாப் நினைவேந்தல்

*இன்குலாப் முதலாம் ஆண்டு நினைவு நாளை இன்குலாப் அறக்கட்டளை சார்பில் இன்குலாப் கவிதைகள், கட்டுரைகள், நாடகங்களை ஆய்வு செய்து பரப்பும் நாளாக சென்னையில் சிறப்புடன் நடத்தியது.*

சங்க இலக்கியங்களை கட்டுடைத்து அதில் அடங்கியுள்ள பெண் விடுதலைக் கருத்துகளை நாடகங்களாக கவிஞர் இன்குலாப் எழுதினார். அதில் ஒன்று அவ்வை நாடகம். சங்க இலக்கியங் களில் அவ்வை என்ற பெயரில் பல பெண் புலவர்கள் இருந்தாலும், வயது முதிர்ந்த தோற்றத்தில் அவ்வையார் என்ற ஒருவரை மட்டுமே முன் நிறுத்தியது இலக்கிய உலகம். ஆணாதிக்கத்தை நியாயப் படுத்தும் அந்த அவ்வையாரின் குரலை ஏனைய அவ்வைகளின் கருத்தாக திணிக்கப்பட்டது. அதியமானுடன் நட்பும் தோழமையும் கொண்டிருந்த அவ்வை ஒரு சுதந்திரப் பெண் என்பதை முன் வைத்து கவிஞர் இன்குலாப் தீட்டியது அவ்வை நாடகம். 2006ஆம் ஆண்டில் மரபாச்சி குழுவினர் அ.மங்கை நெறியாள்கையில் அரங்கேறியது அவ்வை. மீண்டும் இன்குலாப் நினைவாக கடந்த டிசம்பர் 2ஆம் தேதி சென்னையில் 'ஸ்பேசஸ்' அரங்கில் நிகழ்த்தப்பட்டது. அரங்கம் நிரம்பி வழிந்தது. நாடகம் பார்க்க இடமின்றி தவித்த பார்வையாளர் களுக்காக மீண்டும் இரண்டாவது காட்சியாக நாடகம் நடிக்கப்பட்டது. நிகழ்வில் முற்போக்கு சிந்தனை யாளர்கள் ஏராளமாக பங்கேற்றனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர், கழகத் தோழர்களும் பார்வையிட்டனர்.

இரண்டாம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் சென்னை அடையாறு தரமணியில் உள்ள ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அரங்கில் காலை 10 மணியளவில் தொடங்கியது. மக்கள் மன்றக் குழுவினரும், தோழர் அகிலாவும் இன்குலாப் பற்றிய பாடல்களைப் பாடினர். இன்குலாப் கவிதைகளை முழுமையாகத் திரட்டி, 'ஒவ்வொரு புல்லையும் பெயர் சொல்லி அழைப்பேன்' எனும் கவிதைத் தொகுப்பும், 'அதிர்வுகள்' என்ற தலைப்பில் இன்குலாப் பற்றிய கட்டுரைகளின் தொகுப்பும் வெளி யிடப்பட்டன. எழுத்தாளர் பா.ஜெயப் பிரகாசம், இந்த நூலைத் தொகுத் திருந்தார். நிகழ்வில் பேராசிரியர் சரசுவதி, கவிஞர் ஈரோடு தமிழன்பன், கவிஞர் இன்குலாப் படைப்புகள், இலட்சிய உறுதி, களச் செயல்பாடுகளை நினைவுகூர்ந்து பேசினர்.

நூலின் பிரதிகளை கவிஞர் அறிவுமதி, டிராட்ஸ்கி மருது, பொழிலன், பேராசிரியர் கல்விமணி, பேராசிரியர் மணிகண்டன், இதழாளர் முத்தையா, க. சுந்தர், அ.பா. பாலசுப்பிரமணியம் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து நினைவேந்தல் கவியரங்கம் ஈரோடு தமிழன்பன் தலைமையில் சிறப்புடன் நடந்தது. கவிஞர்கள் திண்டுக்கல் தமிழ்ப் பித்தன், அப்துல் ரசாக், கவின்மலர், சல்மா, ஹாஜாக்கனி, தமிழச்சி தங்கபாண்டியன், கனல் மைந்தன் ஆகியோர் இன்குலாப் குறித்த எழுச்சிக் கவிதைகளை அரங்கேற்றினர்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு எழுத்தாளர் பா. செயப் பிரகாசம் தலைமையில் நடந்த ஆய்வரங்கத்தில் இன்குலாப் கவிதைகள் குறித்து செ. சண்முக சுந்தரம், நாடகங்கள் குறித்து பிரளயன், சிறுகதைகள் குறித்து 'புலியூர் முருகேசன்' கட்டுரைகள் குறித்து ஜென்ராம் ஆய்வுரை வழங்கினர். தொடர்ந்து நிழல் திருநாவுக்கரசு உருவாக்கிய இன்குலாப் குறித்த ஆவணப் படம் திரையிடப்பட்டது. இறுதி நிகழ்வாக 'இன்குலாப்' நாடகங்கள் வாசிப்பு நிகழ்வு நடந்தது. குறிஞ்சிப் பாட்டு, யாது எம் ஊர் ஆகிய நாடகங்களை முறையே முனைவர் சி. பார்த்திப ராஜா, ஸ்ரீஜித் சுந்தரம் நெறி யாள்கையின் கீழ் வாசிப்பு நிகழ்ந்தது.

காலையில் நிகழ்வு தொடக்கம் முதல் இறுதி வரை அரங்கம் நிரம்பி வழிந்தது. பெரியாரிய - மார்க்சிய - அம்பேத்கரிய சிந்தனையாளர்கள், இளைஞர்கள், பெண்கள் பெரு மளவில் திரண்டு வந்திருந்தனர். இன்குலாப் மகள் அமீனா, மகன்கள் இன்குலாப், செல்வம் மற்றும் அறக்கட்டளை தோழர்கள் நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். திராவிட இயக்கத் தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவராக தொடங்கிய இன்குலாப் பயணம், பிறகு மார்க்சியம் நோக்கியும், மார்க்சிய - லெனினியம் நோக்கியும், பெரியாரியம் நோக்கியும் பயணித்தது. அனைத்து கோட்பாடு களிலும் அடங்கி உள்ள தலித் மற்றும் பெண்ணிய விடுதலை, ஜாதி பார்ப்பனிய எதிர்ப்பு, தமிழ்த் தேச தன்னுரிமை, பன்னாட்டுச் சுரண்டல் எதிர்ப்புகளை உள்வாங்கி, காலத்தின் பிரதிபலிப்பாக அவரது கொள்கைப் பயணம் நடந்தது. எளிமை, உண்மை, நேர்மை, கனிவுக்கு சொந்தக் காரரான கவிஞர் இன்குலாப், பெரியாரின் பெண்ணியம், மொழி மற்றும் தேசியம் குறித்த கருத்துகளை தீவிரமாக ஆதரித்து பேசினார்; எழுதினார்; கவிதைகளை வடித்தார். 1996ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்ட போது இன்குலாப், பெரியார் திராவிடர் கழக மேடைகளிலும் ஆர்ப் பாட்டங்கள், போராட்டங்களிலும் பங்கேற்றுப் பேசினார். பெரியார் திராவிடர் கழகத்துக்காக முதன் முதலாக இராயப்பேட்டை சைவ முத்தையா தெருவில் அலுவலகம் திறக்கப்பட்டது. அந்த அலுவலகத்தை திறந்து வைத்தவர் கவிஞர் இன்குலாப்.

### மாவீரர் நினைவகம்: மடத்துக்குளம் மோகன் ரூ.50,000/- நன்கொடை

கொளத்தூர் புலியூர் பகுதியில் அமையவிருக்கும் மாவீரர் நினைவகத்துக்கு கழகத் தோழர் மடத்துக்குளம் மோகன் ரூ.50,000/- நன்கொடை வழங்க முன் வந்துள்ளார்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
**ரூ.200**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
periyarmuzhakkam@gmail.com

# மூடநம்பிக்கைகளை பரப்பும் தொலைக்காட்சி தொடர்களுக்கு தடை வருமா?

கர்நாடகாவில் தொலைக்காட்சித் தொடரைப் பார்த்து, அதில் வரும் கதாபாத்திரத்தைப் போல தீ நடனம் ஆடிய 7 வயது சிறுமி, உடல் கருகி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் தாவணகெரே மாவட்டம் ஹரிஹரா டவுனைச் சேர்ந்தவர் மஞ்சுநாத். கூலித் தொழிலாளியான இவரது மனைவி சைத்ரா, மகள் பிரார்த்தனா (7). பிரார்த்தனா 2-ம் வகுப்பு படித்து வந்தாள். வீட்டில் டிவி.யில் ஒரு குறிப்பிட்ட கன்னட சீரியலை பார்ப்பது வழக்கம்.

இந்த தொடரில் நடிகை ஒருவர் தன் கை, கால்களில் தீ வைத்து, தீப்பந்தம் ஏந்தி நடனமாடும் காட்சிகள் வந்தன. அதைப் பார்த்த பிரார்த்தனா, கடந்த 11-ம் தேதி, தானும் கையில் ஒரு பேப்பரை எடுத்து தீ வைத்துக்கொண்டு நடனமாடினாள். அப்போது பிரார்த்தனாவின் ஆடையில் தீப்பற்றிக் கொண்டது. வலி தாங்க முடியாமல் அலறினாள்.

அக்கம் பக்கத்தினர் ஓடிவந்து, சிறுமியின் உடலில் பற்றியிருந்த தீயை அணைத்தனர். உடனடியாக தாவணகெரே அரசு மருத்துவமனைக்கு சிறுமியைக் கொண்டு சென்றனர்.

கடந்த 15 நாட்களுக்கு மேலாக தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவந்த நிலையில், பிரார்த்தனா சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இறந்தாள். இதையடுத்து, சிறுமியின் தந்தை மஞ்சுநாத் அளித்த புகாரின்பேரில் ஹரிஹரா டவுன் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தாவணகெரே மாவட்ட நிர்வாகம், டிவி சீரியல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை தொடங்குவதாக அறிவித்துள்ளது.

பிரார்த்தனாவின் தந்தை மஞ்சுநாத் கூறுகையில், ‘‘குழந்தைகளை தொலைக்காட்சித் தொடர் பார்ப்பதை தடுக்க வேண்டும். நான் என் மகளை கண்காணிக்கத் தவறிவிட்டேன். சில ஆண்டுகளுக்கு முன்னர் இதேபோல் ஒரு சீரியலை பார்த்து நிறைய பேர் கட்டிடத்தின் மேல் இருந்து பறக்க முயற்சித்து கீழே விழுந்து இறந்தனர். இப்போது என் மகள் உடலில் தீ வைத்து நடனமாடி உயிரிழந்திருக்கிறாள். இத்தகைய சம்பவங்கள் இனியும் தொடராத வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ என்றார்.

**பெற்றோர் திருந்த வேண்டும்**

*இந்த சம்பவம் குறித்து மனநல மருத்துவர் கூறியதாவது:*

எல்லா குடும்பங்களிலும் மனிதர்களோடு மனிதர்கள் பேசி புரிந்து கொள்ளும் நேரத்தைவிட, தொலைக்காட்சி மற்றும் ஸ்மார்ட் போன் வழியாக பார்க்கவும், படிக்கவும் புரிந்து கொள்ளும் விஷயங்கள்தான் அதிகமாகிவிட்டன. அதிலும் வீட்டில் இருக்கும் பெற்றோர் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமல், எந்த நேரமும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பது, குழந்தைகளின் மனதில் ஆழமாகப் பதிகிறது. தொலைக்காட்சி வழியாக சொல்லப்படும் விஷயங்களை பின்பற்றலாம் என்ற எண்ணமும் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

தற்போது தொலைக்காட்சி தொடரைப் பார்த்து இந்த குழந்தை தீ வைத்து இறந்தது போல, இதற்கு முன்பு உயிரிழந்த சம்பவங்களும் நடந்திருக்கின்றன. ஏற்கெனவே இதுபோன்று வெளியான ஒரு தொடரைப் பார்த்து அதீத சக்திபடைத்த ஒருவரை போல் உயரத்தில் இருந்து குழந்தைகள் குதித்த சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

அவ்வளவு ஏன்... தங்கள் குழந்தைகள் தொலைக்காட்சியில் பாட்டு போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, அவர்களை வற்புறுத்தி துன்புறுத்தும் பெற்றோரும் உள்ளனர். போட்டியில் பரிசு கிடைக்காவிட்டால், உலகமே பார்க்கும்படி கதறி அழுகின்றனர். இதையெல்லாம் பார்க்கும் குழந்தைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மீதான தங்கள் பற்றுதலையும், நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்கின்றனர். முதலில் பெற்றோர் திருந்த வேண்டும். அடுத்து மூடநம்பிக்கை உள்ளிட்ட அபாயமான விஷயங்களை பரப்பக் கூடாது என்பதில் தொலைக்காட்சிகள் கவனமாக இருக்க வேண்டும். இதையெல்லாம் தாண்டி எந்த நிகழ்ச்சிகளை குழந்தைகள் பார்க்கலாம் என்பதை முடிவு செய்வதோடு, அந்த சமயங்களில் அவர்களுடன் இருந்து நேரம் செலவழிப்பது அவசியம் என்றார்.

# சுற்றுச் சூழல் போராளிக்கு 10 ஆண்டு சிறையாம் : மனித உரிமை ஆணையம் கண்டனம்

வியட்நாமைச் சேர்ந்த 22 வயது நிகுயென் வான் ஹோவா, பத்திரிகையாளராக இருக்கிறார். கடந்த ஆண்டு ஃபார்மோசா நிறுவனத்தின் கழிவுகள் கடற்கரையில் கலக்கப்பட்டதை ஆதாரத்துடன் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார். தொடர்ச்சியாக ஒளிப்படங்கள், வீடியோக்கள் என்று ஆதாரங்களையும் வெளியிட்டு வந்தார். கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட வான் ஹோவாவுக்குத் தற்போது 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. தைவானைச் சேர்ந்த ஃபார்மோசா பிளாஸ்டிக் தொழிற்சாலை ஹா டின் நகரில் செயல்பட்டு வருகிறது. ஆலையில் இருந்து வெளியேறும் சயனைட் உட்பட நச்சு ரசாயனக் கழிவுகளை, சாதாரண கழிவு வெளியேற்றும் குழாய் வழியாக கடற்கரையில் வெளியேற்றி வந்தனர். கடற்கரையில் 120 மைல் தூரத்துக்கு இந்தக் கழிவுகள் பரவிவிட்டன. 115 டன் மீன்கள் இறந்து மிதந்துள்ளன. இதனால் மீன்பிடித் தொழிலும் நலிவடைந்து விட்டது. சுற்றுலாத்துறையும் வீழ்ச்சியடைந்துவிட்டது. இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

நிலமும் நீர் ஆதாரங்களும் மாசு அடைந்திருக்கின்றன. இதைத் தட்டிக் கேட்ட வான் ஹோவாவை, அரசு ஆதரவு ஊடகங்கள் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார் என்று குற்றம் சுமத்தின. அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. இறுதியில் நீதிமன்றம், வான் ஹோவுக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனையும் அதற்குப் பிறகு 3 ஆண்டுகள் வீட்டுக் காவலிலும் இருக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

வழக்கறிஞர் காங் டின், “இந்தத் தீர்ப்பு அதிர்ச்சியளிக்கிறது. எந்தக் குற்றவாளிக்கும் தன் தரப்பைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. வான் ஹோவாவுக்கு வழக்கறிஞரை வைத்துக் கொள்ள வாய்ப்பு தரப்படவில்லை. இவருக்கு எதிராக எல்லா ஆதாரங்களும் கற்பனை செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. வான் ஹோவா மீதான குற்றச்சாட்டுகள் பொய் என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனாலும் ஒரு நிரபராதியைக் குற்றவாளியாக மாற்றமுடிகிறது என்பதை நினைக்கும்போது அதிர்ச்சியாக இருக்கிறது. ரசாயனத்தால் பாதிக்கப்பட்ட மக்களையும் அவர்களைப் பரிசோதித்த மருத்துவர்களையும் கூட இந்த வழக்கில் நுழையவிடாமல் பார்த்துக்கொண்டன சர்வதேச ரசாயன நிறுவனங்கள்” என்கிறார்.

ஃபார்மோசா நிறுவனம் நச்சு ரசாயனத்தை வெளியிட்டது நிரூபிக்கப்பட்டால், சுமார் 500 மில்லியன் டாலர்கள் அபராதம் விதிக்கமுடியும். ஆனால் அரசாங்கம், நிறுவனத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. அவர்கள் தொழிற்சாலையை ஆரம்பிக்கும்போதே பிரத்தியேகமான ஓர் ஒப்பந்தத்தை அரசாங்கத்துடன் செய்துகொண்டிருப் பார்கள் என்கிறார்கள் விமர்சகர்கள்.

மனித உரிமை ஆணையத்தின் ஆசியாவுக்கான பொறுப்பாளர் பில் ராபர்ட்சன், “வான் ஹோவாவின் தண்டனையானது அரசாங்கத்தின் பரந்த மனப்பான்மையையும் நீதிமன்றங்களை அரசாங்கங்கள் எவ்வளவு தூரம் நிர்பந்திக்கின்றன என்பதையும் காட்டுகிறது. நச்சுக் கழிவால் நான்கு மாநிலங்களின் கடல் சார்ந்த பொருளாதாரம் அழிந்துவிட்டது” என்கிறார். ஏற்கெனவே இந்தத் தவறைச் சுட்டிக்காட்டிய மி நாம் என்பவருக்குப் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

**புதுச்சேரியில் கழகம் நடத்திய மாவீரர் நாள்**



## ஆர்.எஸ்.எஸ்.சின் ஆபத்தான திட்டம்

2000 இஸ்லாமிய பெண்களை ‘இந்து’க்களுக்கு திருமணம் செய்யும் இயக்கத்தை ஆர்.எஸ்.எஸ். முன்னணி அமைப்புகளில் ஒன்றான ‘இந்து ஜக்ரான் மஞ்ச்’ என்ற அமைப்பு அறிவித்துள்ளது. ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டில் இந்த செய்தி வெளி வந்துள்ளது. திருமணத்துக்கான செலவு, அவர்களின் எதிர்கால வாழ்வுக்கான பாதுகாப்பு அனைத்தும் வழங்கப்படும் என்றும், இந்து வைதிக சடங்குகளுடன் இத்திருமணங்கள் நடக்கும் என்றும் அந்த அறிவிப்பு கூறுகிறது. திருமணம் செய்து கொள்ளும் இஸ்லாமியப் பெண்கள் இந்துவாக மாற வேண்டிய அவசியமில்லை என்றும் அந்த அறிவிப்பு கூறுகிறது. (இந்துவாக மாறினால் எந்த ஜாதியில் வைப்பார்கள்?)

உ.பி. ‘இந்து ஜக்ரான் மஞ்ச்’ அமைப்பின் தலைவர் அஜுசெவுகான் என்பவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதோடு, இஸ்லாமிய ஆண்கள், இந்து பெண்களை திருமணம் செய்து கொள்வதற்கான பதிலடி என்றும் கூறியுள்ளார். இஸ்லாமியர் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதும் இந்த இயக்கத்தின் நோக்கம் என்றும் அவர் கூறியிருக்கிறார். “ஒரு முஸ்லிம் பெண், ஒரு முஸ்லிமை திருமணம் செய்து கொண்டு 10 குழந்தைகளை பெறுகிறார்கள். அந்த குழந்தைகள் பெரியவர்களாக வளரும்போது இந்துக்களுக்கு எதிரானவர்களாக மாறி விடுகிறார்கள். இதற்கு மாறாக இஸ்லாமிய பெண் இந்து குடும்பத்துக்கு வந்துவிட்டால் அவர்களின் குழந்தைகளும் இந்துக்களாகவே இருக்கும். இந்து மக்கள் தொகை அதிகரிக்கும்” என்றும் அவர் கூறியுள்ளார்.

உ.பி.யில் இந்து பெண்களைக் காப்பாற்றும் பரப்புரை இயக்கம் ஒன்றையும் இந்த மதவெறி அமைப்புதொடங்கி, ‘இஸ்லாமிய ஆண்களை திருமணம் செய்யாதீர்’ என்று இந்து மாணவிகளிடம் கல்வி நிறுவனங்களில் பிரச்சாரம் செய்கிறது. இதற்கு உ.பி.யில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சி முழு ஆதரவு வழங்கி வருகிறது.

## பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி இல்லத்தில் கழகத் தலைவர்

9-11-2017 அன்று காலை, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வேலூர் மாவட்ட கழகச் செயலர் குடியாத்தம் சிவா, கழகத் தோழர்களுடன், வீரியமிக்க தலித் விடுதலைப் போராளியாய் விளங்கியவரும், மக்களால் தளபதி என அன்போடு அழைக்கப் பட்டவருமான பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி இல்லத்துக்கு சென்று அவரது குடும்பத்தினரை சந்தித்தார்.

அடுத்து அவரால் நிறுவப் பட்டதும், அவர் நடத்திய 150 இரவுப் பாடசாலைகளில் ஒன்றானதும், தற்போது அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அரசுத் தேர்வாணையத் தேர்வு களுக்கான இலவச பயிற்சிப் பள்ளியாய் அவரது பெயரன் மகேஷ் தொடர்ந்து இயங்கிவரும் பவுத்த ஆராய்ச்சி மையத்துக்கும் சென்று பார்த்ததோடு, சமூக அக்கறையோடு இயங்கிவரும் பாங்கினை வியந்து பாராட்டினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நமது அடுத்த ஒன்று கூடல் ஈரோட்டில்!



டிசம்பர் 16, ஈரோட்டில் பெண்கள் சுயமரியாதை மாநாடு.

**சென்னையில் ஜாதி ஒழிப்புக்காக பெண்கள் அறைகூவல் விடுத்த அந்த எழுச்சி நிகழ்வுகள், தோழர்களின் உள்ளங்களில் இப்போதும் பசுமையாய் பதிந்து நிற்கிறது. அடுத்து, ஈரோட்டில் கூடுகிறோம்!**

*மதவெறி சக்திகள், ஜாதி வெறி சக்திகள், பெண்களின் சமத்துவத்துக்கும் சுயமரியாதைக்கும் சவால் விடும் ஒடுக்கு முறைகள், மதம் கட்டமைத்த கற்பிதங்கள் –*

- இவை அனைத்துக்கும் எதிராக விழிப்புணர்வு களம் நோக்கி பெண்களை அணி திரட்டும் மாநாடு இது.

மாநாட்டுப் பணிகளில் நிதி வசூலில் பெண் தோழர்கள் முழு வீச்சில் களமிறங்கி செயல்படுகின்றனர்.

*திராவிடர் விடுதலைக் கழகத்தின் தொடக்க விழாவை எழுச்சியுடன் நடத்திய அதே ஈரோட்டில்...*

மீண்டும் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் உணர்வாளர்களும் ஒன்று கூட இருக்கிறார்கள்.

கொள்கை உறவுகளின் ஒன்று கூடுதலிலும் சந்திப்பிலும் நமக்கு நாமே நம் உணர்வுகளை கூர் தீட்டிக் கொள்கிறோம்.

**மத விழாக்களும் மூடநம்பிக்கை சடங்குகளையும் முற்றாகப் புறந்தள்ளி, புதிய சமூகத்துக்கான பாதை அமைக்க களத்தில் நிற்கும் பெரியாரியலாளர்களுக்கு இந்த மாநாடுகளும் ஒன்று கூடல்களும்தான் நமக்கான சமுதாய விழா!**

*ஈரோடு நோக்கி திரளுவோம்; தமிழகத்தைச் சூழ்ந்து நிற்கும் மதவாத ஜாதிய பார்ப்பன பாசிசத்தை முறியடிக்க தமிழர்களின் இளைஞர் சக்தி தயாராகவே இருக்கிறது என்பதை உணர்த்திக் காட்டுவோம்!*

**வாருங்கள், தோழர்களே!**

## கழகத் தோழர் ப.சுகுமார் நினைவுக் கல்வெட்டு திறப்பு



முடிவெய்திய மேட்டூர் கழகத் தோழர் ப. சுகுமார் நினைவு கல்வெட்டு படத்திறப்பு நிகழ்வு, நவம்பர் 27 பகல் 11 மணியளவில் மேட்டூர் என்.எஸ்.கே. நகரில் நடந்தது. கல்வெட்டினை கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் படத்தை பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும் திறந்து வைத்தனர்.

அமைப்புச் செயலாளர் இரத்தின சாமி, பொருளாளர் துரைசாமி, ஆசிரியர் சிவகாமி, மேட்டூர் முத்துக் குமார், மேட்டூர் சக்தி, கோவிந்தராஜ், ஸ்டாலின் (அ.இ.அ.தி.மு.க.), சோம சுந்தரம் (தி.க.), மேட்டூர் இராமச் சந்திரன் உள்ளிட்ட தோழர்கள் இரங்கல் உரையாற்றினர்.

கோயில் பூசாரியாக இருந்து கழக நூல்களைப் படித்து தோழர்களிடம் விவாதித்து, தன்னை உறுதியான பெரியாரியல்வாதியாக மாற்றிக் கொண்ட சுகுமார், கடந்த சில வருடங்களாக உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையிலும் கழக நிகழ்வுகளில் தவறாது பங்கேற்று வந்தார்.

தனது இறுதி நிகழ்வுகள் கழகச் சீருடையான நீல ஜீன்ஸ், கருப்பு சட்டை அணிந்து மூடநம்பிக்கை யின்றி, கழகத் தோழர்களால் நடத்தப்பட வேண்டும் என்று பெற்றோரிடம் கூறியிருந்தார். பெற்றோர்களும் முழு ஒத்துழைப்பு தந்தனர். பெண்களே கண்ணீருடன் கழகத் தோழரின் உடலை இடுகாடு வரை சுமந்து சென்றனர்.

# நீடாமங்கலம் சாதியக் கொடுமை–நூல் ஆய்வரங்கம்



பெரியார் பெருந்தொண்டர் தஞ்சை நபசுபதியின் 12-ஆம் ஆண்டு நினைவு நாளில் 'ரிவோல்ட்' நடத்தும் 'நீடாமங்கலம் சாதியக் கொடுமையும் திராவிட இயக்கமும்' நூல் ஆய்வரங்கம் தஞ்சாவூர் சரோஜ் நினைவகத்தில் 25.11.2017 மாலை 5 மணிக்கு தொடங்கியது

பெரியாரிய எழுத்தாளர் பசு கவுதமன் தலைமையேற்க தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி சிவகுரு வரவேற்புரை ஆற்றினார். எழுத்தாளர் சண்முகசுந்தரம் ஒருங்கிணைப்பில், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி பொதுச்செயலாளர் சாமுவேல்ராஜ், தபெதிக பிரச்சாரச் செயலர் சீனி விடுதலை அரசு, மதிமுக வெளியீட்டுச் செயலர் வந்தியதேவன் ஆய்வுரை நிகழ்த்தினர்

வரலாற்று ஆய்வறிஞர் பேராசிரியர் ஆ இரா வேங்கடாசலபதி இந்நூல் வெளிவர நூலாசிரியர் எவ்வாறெல்லாம் உழைத்தார் என்றும் தான் எப்படியெல்லாம் அவரை வழிகாட்டி விரைவில் நூல் வெளிவர நெருக்குதல் அளித்தேன் என்பதை சுவைபட எடுத்துரைத்தார்

நூலாசிரியர் ஆ திருநீலகண்டன் தன்னுரையில் கழகத் தோழர்கள் மற்றும் பெரியாரிய பற்றாளர்கள் இந்நூல் வெளிவர எவ்வோறெல்லாம் உடனுதவினார்கள் என்றும், தான் எவ்வாறெல்லாம் நூல் வெளிவர களவுழைப்பை செலுத்தினேன் என்றும் விரிவாக எடுத்துரைத்தார்.

இறுதியில் கழகத் தலைவர்,ள் அன்றைய தஞ்சை மாவட்டத்தின் சாதிய சூழல் குறித்தும் பண்ணையார்கள் மிராசுகளின் ஏகபோகம் குறித்தும் காங்கிரசு செல்வாக்கு, விவசாய கூலி தொழிலாளர்களின் நிலை பற்றியும் எடுத்துரைத்தார். நீடாமங்கலம் நூல் போன்று திராவிடர் இயக்கத்திற்கு ஆராய்ச்சி வடிவில் பல்வேறு நூல்களை ஆய்வறிஞர்கள் படைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.


## விற்பனையில் 'நிமிர்வோம்'

**நவம்பர் இதழ்**




- மதவெறிக்குப் பலியான படைப்பாளியின் "உயிரோவியங்கள்"
- காந்தி ஜாதி ஆதரவாளரா? எதிர்ப்பாளரா? வெளிச்சத்துக்கு வராத வரலாற்றுத் தகவல்கள்
- இடஒதுக்கீட்டை மதிக்காத உயர்கல்வி நிறுவனங்கள்
- 1957 ஜாதி ஒழிப்புப் போராட்ட வரலாறு
- கஜினி முகம்மதுவை கோயிலைக் கொள்ளையடிக்க அழைத்து வந்தது யார்?
- இன்னும் பல வரலாற்றுப் பதிவுகளோடு.....

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு : நிர்வாகி, 'நிமிர்வோம்' மாத இதழ்,
95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர்,
சென்னை – 600 004. தொலைபேசி எண் : 044 24980745 / 7299230363
www.dvkperiyar.com / nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 7th December 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN